# கலை ஆளுமை மாலினி பரராஜசிங்கம்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

வாழ்வியல் குறித்த, குறிப்பாக பெண்கள் சம்பந்தமாக முற்போக்கான பார்வை கொண்டவரும் தான் சார்ந்த கலைகளூடாக அச்சிந்தனைகளை முன்னிலைப்படுத்துபவரும் தான் கற்றுத் தேர்ச்சி பெற்ற நடனக்கலைக்கு அப்பால் நாடகம், கூத்து, வில்லிசை போன்ற கலைகளில் கால்பதிந்து வருபவரும், முதியோர் பெண்கள் அமைப்பினரின் பிரியமான தோழியும் செயற்பாட்டாளருமான மாலினி பரராஜசிங்கம் அவர்களை ஆழத்து முத்துக்கள் பகுதியில் பதிவிடுவதில் தாய்வீடு மகிழ்வுறுகிறது.

உடுவிலைச் சேர்ந்த பரராஜசிங்கம் - சாவித்திரி இணையரின் மகளான இவர் இராமநாதன் கல்லூரியில் பயின்று யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் நாட்டியக் கலைமணி பட்டத்தைப் பெற்றவர். சங்கீத வித்துவான்கள் ஐயாக்கண்ணு தேசிகர், விஸ்வநாத ஐயர் ஆகியோரிடம் சங்கீதமும் கொக்குவில் கலாபவனம் நடனப்பள்ளியில் நடனவித்தகர் ஏரம்பு சுப்பையா அவர்களிடம் நடனமும் பயின்றவர். மேற்படி ஆரம்ப குருவானவர்களின் வழிகாட்டலில் திறமையை வளர்த்துக் கொண்ட இவர் வட இலங்கை சங்கீதசபை நடத்திய ஆசிரியப் பரீட்சைகளில் சித்தியெய்தி சங்கீத கலாவித்தகர், நாட்டிய தாரகை பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பல்கலைக்கழகத்தில் நடனத்துறையில் தன்னை மெருகூட்டிய ஆசிரியைகளான அனுஷ்யா மயில்வாகனம், பத்மரஞ்சனி, லீலா செல்வராஜா, சாந்தா பொன்னுத்துரை ஆகியோரை நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

கல்லூரி நாட்களில் சாந்தினி சிவநேசன் அவர்களிடமும், அடையாறு இலக்ஷ்மணன் அவர்களிடம் நடனம் பயின்ற தனது சகோதரி நந்தினியிடமும் நடனம் பயின்ற இவர் கல்லூரியினர் தயாரித்த 'பீஷ்மர் சபதம்' நாட்டிய நாடகத்தில் பீஷ்மராகவும், 'சீதாகல்யாணம்' நாட்டிய நாடகத்தில் இராமர், அனுமன், தசரதன் ஆகியவேடங்களை வெவ்வேறு மேடையேற்றங்களில் ஏற்றுச் சிறப்புச் செய்தார். மேலும், 'நாதமணி' வீரமணி ஐயர் தயாரித்த 'ஞான சம்பந்தர்' நாட்டிய நாடகத்தில் சிவபெருமானாக வேடமேற்றார். இந்நாட்டிய நாடகம் ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது குறிப்பிடத்தக்கது.

கல்லூரியில் இடம் பெற்ற கலை, விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுகள் வென்றதோடு மாவட்ட ரீதியாக நடைபெற்ற நடனம், சங்கீதம் போட்டிகளில் தங்கப்பதக்கங்களையும் பெற்றுக்கொண்டவர். தேடலும் தேடலை அடையும் வலிமையும் வைராக்கியமும் மிக்க இவர் ஆசிரியர் தியாகராசா அவர்களிடம் யோகா கலையையும், பெங்களூர் சென்று தற்காப்புக் கலையையும் கற்றுத் தேர்ந்தார்.

பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டில் பயிலும் போது நடன ஆசிரியை சாந்தா பொன்னுத்துரை அவர்களும், கூத்துக் கலைஞர் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களும் இணைந்து தயாரித்த 'சக்தி பிறக்குது' என்ற கூத்துருவ நாட்டிய நாடகத்தில் கூலித் தொழிலாளியாக மாலினி நடித்திருந்தார். தோட்டத் தொழிலாளரின் பிரச்சினைகளை மையப்படுத்திய இந்நாடகம் 1986ல் கைலாசபதி கலையரங்கில் மேடையேறியது. கலையின் எல்லா கூறுகளையும் அறிய வேண்டும் என்ற ஆர்வமிக்க இவர், இதே காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வந்த அரங்கவியல் கற்கை நெறியில் இணைந்து குழந்தை ம. சண்முகலிங்கம், சி.மௌனகுரு, நடிகமணி வி.வி. வைரமுத்து போன்ற பெரும் கலைஞர்களிடம் நாடக வரலாறுகளையும் நாடக நுணுக்கங்களையும் அறிந்து கொண்டார். அக்கற்கைநெறியின் முடிவில் மேடையேற்றப்பட்ட மஹாகவியின் 'புதியதொரு வீடு' என்ற பாநாடகத்தில் இவர் மயிலியாக வேடமேற்றதோடு நடன அமைப்பின் உதவியாளராகவும் செயற்பட்டார். இந்நாடகத்தில் பேராசிரியர் சி.ஜெய்சங்கர் மாசிலனாக நடித்திருந்தார்.



இவரது ஆசிரிய பயிற்சிக் காலத்தின் போது இவர் எழுதி, இசையமைத்து, நடன அமைப்பு செய்த 'பொம்மலாட்டம்' என்ற நிகழ்வு பலராலும் பாராட்டப்பட்டது. வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியையாகவும் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றிய இவர் யுத்த சூழ்நிலை காரணமாக கொழும்புக்கு இடம்பெயர்ந்தார். அங்கு பம்பலப்பிட்டி RCTM கல்லூரி, இரத்மலானை இந்துக் கல்லூரி, தெகிவளை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இவர் ஆசிரியையாகப் பணிபுரிந்தார்.

1995ல் கனடாவுக்கு குடிபெயர்ந்த இவர் கலாசாகரம் நுண்கலைக் கல்லூரியை ஆரம்பித்து நடனம் பயிற்றுவித்து வருகிறார். இக்கல்லூரியூடாக 'பாரதி கண்ட புதுமைப்பெண்', 'சக்தி கொடு', 'துணிந்து நில் தொடர்ந்து செல்', 'தண்டை முழங்கு', 'மாமியார் கொடுமை', 'தாண்டவம்' ஆகிய நாட்டிய நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். இவை தவிர, சுதர்சன் துரையப்பாவுடன் இணைந்து 'காமகோலா', 'தளும்பு', 'மெய் இழந்தபோது' ஆகிய நடன நிகழ்வுகளை செய்தது மாத்திரமன்றி, பார்வதி கந்தசாமி அவர்களின் 'ஆறாத காயம்' என்ற நாடகத்திலும் நடித்துள்ளார்.

நாட்டியம் போலவே நாடகத்துறையிலும் அதீத ஆர்வமிக்க இவர் மனவெளி கலையாற்றுக் குழுவினரின் அரங்காடல் நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்கு கொண்டுள்ளார். சீதார் என்ற மரம் பற்றிய சேரனின் கவிதையைக் கருவாக்கி 'தனிமரம்' என்ற நாட்டிய நாடகத்தை மாலினி அளிக்கை செய்தார். ஓவியர் கருணா அதனைக்காட்சிப்படுத்திய விதம் நிகழ்வை வேறு ஒரு தளத்துக்கு இட்டுச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். மேலும் அரங்காடலில் சீதனப் பிரச்சினையை மையப்படுத்திய 'வட்டத்துக்குள் நீங்களா', க.நவம் அவர்களின் 'ஊர்ப்போக்கு', பி. விக்னேஸ்வரன் அவர்களின் 'ஒரு பொம்மையின் வீடு' ஆகிய நாடகங்களில் நடித்துப் பாத்திரங்களுக்குப் பெருமை சேர்த்தார். எமது கலைவடிவமான கூத்துக்கலையிலும் அனுபவம் பெற்ற இவர் அரங்காடல் நிகழ்வில் இடம்பெற்ற காலசர்ப்பத்தில் மண்ணின் தெய்வமாக நடித்துள்ளார். 'ஈழநிலத்தார் அழைப்பாடல்' என்ற நிகழ்வில் நடித்ததுடன் அதில் சில நடன அமைப்பினையும் செய்திருந்தார். இவை இரண்டும் மெலிஞ்சிமுத்தனின் நெறியாள்கையில் இடம்பெற்ற நிகழ்வுகள்.

தாய்வீடு நடத்தும் அரங்கியல் விழாவில் காலம் செல்வம் நெறியாள்கை செய்த 'கொற்றவை' என்ற கூத்தில் மாலினி அவர்கள் கொற்றவையாக முதன்மைப் பாத்திரம் ஏற்றிருந்தார். மேலும் ஓவியர் K. கிருஷ்ணராஜா தயாரித்த 'தீவு' என்ற நாடகத்தில் நடித்ததுடன் நடன அமைப்பையும் மேற்கொண்டிருந்தார்.

இவை தவிர, பெண்களின் பிரச்சினைகள் குறித்த கருமையம் நாடக அமைப்பினர் மேடையேற்றிய நாடகம், சக்கரவர்த்தியின் நாடகம் மற்றும் காலம் செல்வம் தயாரித்த காத்தவராஜன் கூத்து என்பவற்றிலும் இவர் நடித்துள்ளார்.

நடனம், நாடகம், கூத்து போன்ற கலைகளுக்கு அப்பால் எமது பாரம்பரிய கலைவடிவமான வில்லிசையிலும் ஆர்வம் கொண்டு சோக்கல்லோ சண்முகம் வில்லுப்பாட்டுக் குழு வழங்கிய மூன்று வில்லிசை நிகழ்ச்சிகளில் இவர் பங்கு கொண்டுள்ளார். நடிகமணி வி.வி. வைரமுத்துவின் சரிதம் சொல்லும் 'சுடலையில் உயிர்த்த சுருதி', 'கள்ளழகன்', 'கொழுக்கட்டைகள்' என்பனவே இவர் பங்கு கொண்ட வில்லிசை நிகழ்ச்சிகளாகும்.

சிறந்த சமூக செயற்பாட்டாளரான இவர் இங்குள்ள பெண்கள் முதியோர் அமைப்புகளுடன் இணைந்து தான் பயின்ற கலைகளூடாக அவர்களை ஆற்றுப்படுத்தும் நற்காரியங்களைச் செய்துவருகிறார். கோலாட்டம், கும்மி, காவடி, கரகம் போன்ற நடனங்களை அளிக்கை செய்வதோடு யோகக் கலையையும், மனமகிழ்வையும் மன உறுதியையும் ஏற்படுத்தவல்ல உளவள பட்டறைகளையும் நடத்தி வருகிறார். முற்றும் முழுதாக முதியோர் பங்குபற்றிய 'சக்தி பிறக்குது' என்ற இவரது நாட்டிய நாடகம் குறிப்பிடத்தக்க முயற்சியாகும். இன்று நிகழ்ச்சிகள் செய்பவர்களாக அல்லது நிகழ்ச்சிகளின் பார்வையாளர்களாக முதியோர்கள் தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட பின்னணியில் மாலினியின் பங்களிப்பு முக்கியமானது.

கடினமான சமூகச் சூழலில் வளர்ந்த போதிலும் பெண்ணிய சிந்தனைகளின் வழிநடந்து, 'இது ஆண்களுக்கு உரியது' என்ற முறைமைகளை உடைத்தெறிந்து, தான் வரித்த கொள்கை வழி வாழ்ந்து வரும் சமூக கலை செயற்பாட்டாளர் மாலினி பரராஜசிங்கம் அவர்களை சர்வதேச பெண்கள் நாள் இதழில் பதிவிடுவது பொருத்தமானதே.



sriskandan@thaiveedu.com